**22.10.2025**

**அ.வ.எண். 937/2017**

**பி.சா.1 - பாலசுப்பிரமணியம், த/பெ. தங்கவேல்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 22.10.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் ஏற்கனவே இதே வழக்கில் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எனது நிறுவனத்தில் இருந்து சிறப்பு அதிகார ஆவணம் வழங்கியுள்ளார்களா என்றால் இல்லை. எனக்கு அங்கீகார கடிதம் வழங்கியுள்ளார்கள். எனக்கு வழங்கியுள்ள அங்கீகார கடிதம் இந்திய சாட்சிய சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சிட்டா க.ச.எண்.194/9 ற்குரிய சிட்டா நகல் என்றால் சரிதான். **மேற்படி சிட்டா வா.சா.ஆ.22 குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தில் இந்த வழக்கில் 1ம் வாதி தெய்வசிகாமணி பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. க.ச.எண்.194/9 என்பது கூட்டு வண்டித்தடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், UDR ல் கூட்டு வண்டித்தடம் என்று குறிப்பிடவில்லை. மொத்தம் எவ்வளவு ஏக்கர் பூமியை கிரயம் பெற்றுள்ளோம் என்றால் தெரியாது. உட்பிரிவு புல எண்.5, 6, 7, 8 நிலங்களை தவிர மற்ற நிலங்களை கிரயம் பெற்றுள்ளோம். ஆனால் எவ்வளவு ஏக்கர் விஸ்தீரணத்தை கிரயம் பெற்றுள்ளோம் என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் தெரியும். தாவா 1ம் அயிட்ட சொத்து புல எண்.194/4 க்கு கட்டுப்பட்டது என்றால் இல்லை.

3. எனது கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் எனது புதிய வழக்கறிஞரை வைத்து ஆவணங்களை சரிபார்த்த போது தாவா 1ம் அயிட்ட சொத்து க.ச.எண்.194/4 க்கு கட்டுப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் ச ரிதான். தற்போது தாவா 1ம் அயிட்ட சொத்து புல எண்.194/4 க்கு கட்டுப்பட்டது என்றால் இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புல எண்.194/4 காலையில் நான் எவ்வளவு ஏக்கர், யாரிடம் இருந்து கிரயம் பெற்றேன் என்றால்

ஏக்கர் 1.48 சென்டை ரத்தினம் மற்றும் ஜெயபிரகாஷ் என்பவரிடமிருந்து 2005 ம் ஆண்டு பி.சா.ஆ.3 ஆவணம் மூலம் கிரயம் பெறப்பட்டது. பி.சா.ஆ.3 ஆவணத்தை 9 நபர்களிடம் இருந்து கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். அதில் 6, மற்றும் 7 லக்கமிட்டவர்கள் தான் ரத்தினம் மற்றும் ஜெயபிரகாஷ் என்றால் சரிதான்.

4. மேற்படி பி.சா.ஆ.3 ஆவணம், 10.07.1975 செட்டில்மெண்ட் ஆவணப்படியும், 29.03.1976 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படியும் பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரயம் வாங்கியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணத்தில், நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரயம் பெற்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். க.ச.எண்.194/4, 194/15, 194/9, 194/14 ல் பகுதி, 194/9 ல் பகுதி என்று தான் பி.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. பி.சா.ஆ.3 ஆவண சொத்து விவரத்தில் க.ச.எண்.194/4 காலையில் புஞ்சை ஏக்கர் 1.48, 194/15 காலையில் பு.ஏ.1.16, க.ச.எண்.194/9 காலையில் பு.ஏ.0.47 2/10 என்றும், க.ச.எண்.194/14 காலையில் பு.ஏ.0.20 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பூமிகளுக்கு செக்குபந்திகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அது முழு உட்பிரிவுடன் உள்ளதால் செக்குபந்திகள் குறிப்பிடப்படவில்லை. முழு உட்பிரிவையும் நாங்கள் கிரயம் பெற்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.22 ஆவணப்படி க.ச.எண்.194/9 நம்பர் காலையில் 1ம் வாதி தெய்வசிகாமணிக்கும் பங்கு உள்ளபோது முழு உட்பிரிவையும் வாங்கியதாக சொல்வது பொய் என்றால் இரண்டு ஆவணங்கள் மூலம் நாங்கள் க.ச.எண்.194/9 ல் உள்ள மொத்த விஸ்தீரணமான ஏக்கர் 0.59 யை நாங்கள் கிரயம் பெற்றுள்ளோம்.

6. பி.சா.ஆ.12 UDR ஆவணத்தில், 12 காலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.12 UDR ஆவணத்தின் முதல் பக்கத்தில், 11 காலம் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.12 UDR ஆவணத்தில் 12 வது காலத்தை குறிப்பிட்டால் வாதிகளுக்கு சொத்தில் பங்கு உள்ளது தெரிந்துவிடும் என்பதால் வேண்டுமென்றே எங்களது செல்வாக்கை கொண்டு மறைத்துள்ளோம்

என்றால் சரியல்ல. பி.சா.ஆ.12 ஆவணத்தில் முதல் பக்கத்தில் 12 வது காலம் விடுபட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் சொத்துக்களை கிரயம் பெறும்போது மூல ஆவணங்களை பார்த்து கிரயம் பெற்றோம். அந்த வகையில் ரத்தினம் மற்றும் ஜெயபிரகாஷ் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட மூல ஆவணமான வா.சா.ஆ.18 ஆவணத்தை பார்த்து கிரயம் பெற்றோம் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.18 ஆவண சொத்து விவரத்தில்,க.ச.எண்.194 என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், உட்பிரிவு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 1975 ல் ஏற்படுத்தப்பட்டது, உட்பிரிவு செய்யப்பட்டது 1985 ம் ஆண்டு UDR ஏற்படுத்தப்பட்டது ஆகும். நாங்கள் 2005 ல் கிரயம் பெற்றோம். வா.சா.ஆ.18 ஆவணத்தில், க.ச.எண்.194 நம்பர் காலையில் பு.ஏ.2.71 ¼ ல் ரத்தினம் மற்றும் ஜெயபிரகாஷிற்கு செட்டில்மெண்ட் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கிரயம் பெற்றுள்ள பி.சா.ஆ.3 ஆவணத்தில் ரத்தினம் என்பவருக்கு மூலப்பத்திரமாக வா.சா.ஆ.19 ஆவணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.19 ஆவணத்தில் க.ச.எண்.194 நம்பர் காலையில் செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

8. பி.சா.ஆ.3 ஆவணத்தில், க.ச.எண்.194/4 காலையில் புஞ்சை ஏக்கர் 1.48, 194/15 காலையில் பு.ஏ.1.16, க.ச.எண்.194/9 காலையில் பு.ஏ.0.47 2/10 என்றும், க.ச.எண்.194/14 காலையில் பு.ஏ.0.20 என்றும் மொத்தம் ஏக்கர் 3.33 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரத்தினம் மற்றும் ஜெயபிரகாஷ் ஆகியோர்களுக்கு ஏக்கர் 2.71 ¼ பூமி பாத்தியப்பட்டபோது நாங்கள் வேண்டுமென்றே ஏக்கர் 3.33 சென்ட் என்று பி.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டு கிரயம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல, மூலப்பத்திரம் மற்றும் UDR ஆவணத்தை சரிபார்த்து கிரயம் பெறப்பட்டது. பி.சா.ஆ.3 நடராஜன் கிரயம் பெற்ற ஆவணத்தின் மூல ஆவணம் வா.சா.ஆ.20 ஆவணம் என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.20 ஆவணத்தில் நடராஜன் கிரயம் பெற்றது பு.ஏ.5.42 ½ என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் மேற்படி நடராஜன் என்பவர் வாதிகளுக்கு

பு.ஏ.4.42 ½ கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. ஆனால் உண்மையில் எவ்வளவு கிரயம் கொடுத்தார் என்பது தெரியாது. பி.சா.ஆ.3 ஆவணத்தில், நாங்கள் நடராஜன் என்பவரிடம் இருந்து 194/13, 194/14, 194/9 உட்பிரிவுகளில் கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அத்துடன் வேறு சர்வே எண் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்து விவரத்தில் க.ச.எண்.194/13 எண் காலையில் நடராஜனிடமிருந்து கிரயம் பெற்றதாக பு.ஏ.1.21 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நடராஜன் என்பவருக்கு 1 ஏக்கர் தான் மீதம் உள்ள போது, நாங்கள் வேண்டுமென்றே பு.ஏ.1.21 என்று குறிப்பிட்டு கிரயம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. மூலப்பத்திரம் மற்றும் UDR யை அடிப்படையாக கொண்டு தான் வாங்கப்பட்டது.

10. நடராஜனுக்கு பாத்தியமில்லாத க.ச.எண்.194/14, 194/9 காலைகளை குறிப்பிட்டு கிரயம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் பாத்தியமில்லா சொத்துக்களை கிரயம் பெற்றதால் தான் 9 நபர்களிடம் இருந்து ஒரே கிரய பத்திரம் மூலம் கிரயம் பெற்று அதை மறைக்க முற்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து தான் கிரயம் பெறப்பட்டது. எங்களுக்கு கிரயம் கொடுத்தவர்களுக்கு பாத்தியமில்லாத சொத்துக்களை கிரயம் பெற்றதால் தான் செக்குபந்தி குறிப்பிட்டு கிரயம் பெறவில்லை என்றால் சரியல்ல, செக்குபந்தி குறிப்பிடவில்லை. உட்பிரிவு குறிப்பிட்டு கிரயம் பெறப்பட்டுள்ளது.

11. ஒருவரின் பூமியின் நிலத்தின் பாத்தியத்தின் நிரூபணம் செய்யும் ஆவணம் பத்திரங்கள் தான் என்றால் பத்திரம் மற்றும் வருவாய் ஆவணங்கள் ஆகும். நான் சொல்வது தவறு என்றும், வருவாய் ஆவணங்கள் ஒருவரின் நில பாத்தியத்தை நிர்ணயம் செய்யும் ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. 1, 2 ம் அயிட்ட சொத்திற்கு மேல்புறம், வடபுறம், கிழபுறம் மூன்று பகுதிகளிலும் எங்களுடைய சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறமாக மந்தை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழபுறத்தில் தென்வடலாகவும், மேலபுறத்தில் தென்வடலாகவும், வடபுறத்தில் கிழமேலாகவும் கம்பிவேலி அமைத்துள்ளோம் என்றால் நாங்கள் கிரயம் வாங்கிய உடன் வேலி அமைத்தோம்.

12. தாவா சொத்திற்கு கிழபுறமாக உள்ள க.ச.எண்.194 தற்போதைய உட்பிரிவு படி க.ச.எண்.194/9 என்பது, 194 ன் நில உரிமையாளர்களுக்கு பாத்தியப்பட்ட தென்வடல் வண்டிப்பாதை என்றால் இல்லை. நாங்கள் எங்களது கிரய முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட அனைத்து மூல ஆவணங்களிலும் மேற்படி வண்டித்தடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. நாங்கள் வேண்டுமென்றே வாதிகள் தடத்தை உபயோகப்படுத்த கூடாது என்பதற்காக நாங்கள் கம்பிவேலி அமைத்துள்ளோம் என்றால் அது வண்டித்தடம் அல்ல, பூமி தான், அந்த பூமியை நாங்கள் கிரயம் பெற்றுள்ளோம்.

13. நாங்களும், வாதிகளும் ஒரு நடராஜன் என்பவரிமிருந்து கிரயம் பெற்றோம் என்றால் சரிதான். நடராஜன் என்பவரிமிருந்து வாதிகள் வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் நாங்கள் கிரயம் பெறுவதற்கு முன்பே கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் எவ்வளவு கிரயம் பெற்றார்கள் என்று தெரியாது. வாதிகள் ஏற்கனவே கிரயம் பெற்ற பு.ஏ.4.42 ½ போக நடராஜனுக்கு மீதமிருந்தது 1 ஏக்கர் மட்டுமே என்றால் சரியல்ல. நடராஜன் என்பவரிடமிருந்து நாங்கள் ஏக்கர் 1.21 சென்ட் கிரயம் பெற்றது செல்லாது என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ரத்தினம் மற்றும் ஜெயபிரகாஷிற்கு பு.ஏ. 2.71 ¼ பாத்தியம் உள்ள நிலையில் நாங்கள் ஏக்கர் 3.33 சென்ட் கிரயம் பெற்றது செல்லாது மற்றும் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

14. எங்களது எதிர் வழக்குரையில் வாதிகள் சொத்தை ஆக்கிரமித்துள்ளதாக சொல்லியுள்ளோமா என்றால் இல்லை.க.ச.எண்.194/9 காலையானது வண்டித்தடமாக உள்ள நிலையில் அதை நாங்கள் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றும், வாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகளின் 1, 2 அயிட்ட சொத்துக்களை சுற்றி எங்களது பூமி உள்ளதாலும், தென்புறமாக மந்தை இருப்பதாலும், வாதிகள் பூமியில் எங்களைதவிர வேறு யாரும் ஆக்கிரமிப்பு செய்ய முடியாது என்றால் சரியல்ல. நாங்கள் வாதிகள் பூமியை ஆக்கிரமிப்பு செய்து விட்டு ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட

பட்டாவின் அடிப்படையில் சொத்துக்களை கிரயம் பெறவில்லை என்றால் மூலப்பத்திரம் மற்றும் UDR படி கிரயம் பெறப்பட்டது.

15. நாங்கள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து வேலி போட்ட பின்னிட்டு தான் வாதிகளுக்கு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவில் விஸ்தீரணம் குறைவாக உள்ளது பற்றி தெரிய வந்தது என்றால் சரியல்ல. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டாவில் பரப்பளவு குறைவாக இருப்பதை நாங்கள் எங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்டு எங்களது செல்வாக்கை பயன்படுத்தி வாதிகளின் பூமியை ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றால் சரியல்ல, எங்களது ஆவணப்படி தான் கம்பிவேலி நாங்கள் அமைத்துள்ளோம்.

16. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எவ்வித அறுகதையும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் உண்மைகளை மறைத்து இந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் வழக்கில் தரப்பினராக இல்லாத நிலையில் நான் இந்த வழக்கில் சிறப்பு அதிகார பத்திரம் இல்லாமல் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. இந்திய சாட்சிய சட்டத்தின்படி என்னுடைய சாட்சியம் பரிசீலனைக்கு உகந்தது அல்ல என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur